**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 169/2024**
**வழக்கு சாட்சி PW-12**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | Dr.ஆதிநாராயணன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | முத்துசாமி | தொழில் | : | மருத்துவர் |
| கிராமம் | : | திருநெல்வேலி | வயது | : | 46 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Wednesday of 11.02.2026.

**(எதிரிகள் ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் நுண்கதிர் பிரிவில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 29.05.2018 ம் தேதி இராஜேஸ்வரி என்பவருக்கு நுண்கதிர் படங்கள் (4676ME/29.05.2018) எடுக்கப்பட்டு என்னுடைய அறிக்கைக்காக சமர்பிக்கப்பட்டது. அவருக்கு வலது கால் மற்றும் மூட்டுப்பகுதி, நெஞ்சகப்பகுதி, வலது கை, வலது முழங்கை, இடது கை, இடது முழங்கை ஆகிய இடங்களில் எடுக்கப்பட்ட நுண்கதிர் படங்களை ஆய்வு செய்து பார்த்ததில், அவருடைய இரண்டு கைகளிலும், முழங்கைப்பகுதிகளிலும், கையின் மேற்கைப்பகுதிகளிலும் இரண்டு எலும்புகளிலும் முறிவு இருந்தது. அவருடைய எக்ஸ்-ரே அறிக்கை சிகிச்சை குறிப்பில் உள்ளது. அது அ.சா.ஆ.11 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**1, 2 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

நுண்கதிர் படங்கள் மருத்துவமனையில் உள்ளது என்றால் தற்போது மருத்துவமனையில் அழிக்கப்பட்டு விட்டது. ஆய்வாளர் என்னை விசாரிக்கும் போது, நுண்கதிர் படத்தை நான் ஆய்வாளரிடம் காண்பித்தேனா? என்றால் இல்லை. நுண்கதிர் படங்களை நான் ஆய்வாளரிடம் ஒப்படைக்கவில்லை. என்னுடைய கருத்துரு தவறானது என்றால் சரியல்ல.

(1, 2 எதிரிகளின் குறுக்கு விசாரணையானது, 3, 4, 5 எதிரிகளின் குறுக்கு விசாரணையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. )

**மறுவிசாரணை –**

இல்லை.

சாட்சி திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை காணொளி அறையில் இருந்து காணொளி மூலம் ஆஜரானார். அவரது வாக்குமூலம் Thiru. Sivamurugan, Junior Assistant திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை என்பவர் முன்னிலையில் ஒருங்கிணைக்கப்பட்டு, இந்த திறந்த நீதிமன்றத்தில் பெஞ்ச் கிளார்க் அவர்களால் பிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.02.12 17:09:26 +0530